# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : DW-1 | Date | : 06.08.2024 |
| Case No. | : **O.S.** 40/2019 | Nationality | : Indian |
| Name | : முருகானந்தம் | Religion | : |
| Father's/Husband's Name | : அழகர்சாமி | Age | : 54 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>பி.வா.சா.1</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. எனது தாத்தா பெயர் சீனிவாசன் ஆகும். நான் தாவா சொத்தினை சாகுபடி செய்து வருவதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆர்டிஆர், சிட்டா அடங்கல் மற்றும் பயிர் காப்பீடு செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் மேற்படி ஆவணங்கள் பற்றிய விவரங்களை எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே வாதிக்கு எதிராக தாக்கல் செய்த அசல் வழக்கு எண்

117/2013 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் நான் அதற்கு எதிராக மாண்பமை மதுரை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளேன். மேற்படி மேல்முறையீட்டு வழக்கின் எண் எதுவும் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு மேல்முறையீடு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அதனால்தான் அதுகுறித்த விவரங்களை நான் நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தற்போது வரை தாவா சொத்து வாதியின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றாலும் நான் வழக்கிற்காக எனது அனுபவத்தில் இருந்து வருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.